# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் வர்த்தமானப் பத்திரிகை

## *2018 ஆம் ஆண்டு யூலை மாதம் 26 ஆம் திகதிய பகுதி II இற்குக் குறைநிரப்பி*

*(2018.07.26 ஆம் திகதியன்று வெளியிடப்பட்டது)*

# இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தம்)

***1976 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, இலங்கை ஆளணி முகாமை நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டமூலம்***

*தொழில், தொழிற்சங்க உறவுகள் மற்றும் சப்பிரகமுவ அபிவிருத்தி அமைச்சர் அவர்களால் பிரசுரிக்கப்படுமாறு பணிக்கப்பட்டது*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்தில் பதிப்பிக்கப்பெற்றது

கொழும்பு 5, அரசாங்க வெளியீட்டலுவலகத்தில் பெற்றுக்கொள்ளலாம்

**விலை : ரூபா 12.00** **தபாற் செலவு : ரூபா 15.00**

*இவ்வர்த்தமானியின் குறைநிரப்பியை* www.documents.gov.lk *எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

**சட்டப்பயன்பற்றிய கூற்று**

***வாசகம் 2 :*** *இவ்வாசகம், இலங்கை ஆளணி முகாமை நிறுவகத்தின் பெயரை மாற்றுவதற்கென, 1976 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, ஆளணி முகாமைச் சட்டத்தைத் திருத்துகின்றது.*

***வாசகம் 3 :*** *இது, வாசகம் 2 இனால் மேலேயுள்ள சட்டத்திற்கு செய்யப்பட்ட திருத்தத்தின் விளைவாந்தன்மையினதாகவுள்ளது.*

## இலங்கை ஆளணி முகாமை நிறுவகம்
## (திருத்தம்)

ச. வ.- ஓ. 7/2018

### 1976 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, இலங்கை ஆளணி முகாமை நிறுவகச் சட்டத்தைத் திருத்துவதற்கானதொரு சட்டம்

*முன்னுரை.*

1976 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, இலங்கை ஆளணி முகாமை நிறுவகச் சட்டத்தினால் கூட்டிணைக்கப்பட்ட இலங்கை ஆளணி முகாமை நிறுவகத்தின் உறுப்பினர்கள், அதன் பெயரைத் திருத்துவதற்கு தீர்மானமொன்றை நிறைவேற்றியிருப்பதாதலாலும்:

அத்துடன் இலங்கை ஆளணி முகாமை நிறுவகமானது அத்தகைய தீர்மானத்திற்கு பயன்கொடுக்கவென அதன் பெயரை திருத்துவதற்கு விண்ணப்பித்திருப்பதாதலாலும் அத்தகைய விண்ணப்பத்தை அனுமதிப்பது உசிதமானதாக இருக்குமாதலாலும்:

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசின் பாராளுமன்றத்தினால் பின்வருமாறு சட்டமாக்கப்படுவதாகுக :-

*சுருக்கப்பெயர்.*

**1.** இச்சட்டம், 2018 ஆம் ஆண்டின் ஆம் இலக்க, இலங்கை ஆளணி முகாமை நிறுவகம் (திருத்தச்) சட்டம் என எடுத்துக்காட்டப்படலாம்.

*1976 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க சட்டம் மற்றும் எழுத்திலான சட்டம் முதலியவற்றை திருத்துதல்.*

**2.** (1) (இதனகத்துப்பின்னர் ‘‘முதன்மைச் சட்டவாக்கம்’’ எனக் குறிப்பீடுசெய்யப்படும்) 1976 ஆம் ஆண்டின் 24 ஆம் இலக்க, இலங்கை ஆளணி முகாமை நிறுவகச் சட்டம், முதன்மைச் சட்டவாக்கத்தில் ‘‘இலங்கை ஆளணி முகாமை நிறுவகம்’’ எனக் காணப்படும் இடமெல்லாம் அச்சொற்களுக்குப் பதிலாக ‘‘இலங்கை பட்டயம்பெற்ற ஆளணி முகாமை நிறுவகம்’’ எனும் சொற்களை இடுவதன்மூலம் இத்தால் திருத்தப்படுகின்றது.

(2) ஏதேனும் எழுத்திலான சட்டத்தில், ‘‘இலங்கை ஆளணி முகாமை நிறுவகம்’’ என்னும் சொற்களுக்குப் பதிலாக ‘‘இலங்கை பட்டயம்பெற்ற ஆளணி முகாமை நிறுவகம்’’ என்னும் சொற்கள் இடப்படுதல் வேண்டும்.

(3) ஏதேனும் அறிவித்தல், ஒப்பந்தம், தொடர்பாடல் அல்லது வேறு ஆவணத்தில், "இலங்கை ஆளணி முகாமை நிறுவகம்" என்பதற்கான ஒவ்வொரு குறிப்பீடும் "இலங்கை பட்டயம்பெற்ற ஆளணி முகாமை நிறுவகம்" என்பதற்கான குறிப்பீடு ஒன்றாக வாசிக்கப்பட்டு பொருளமைத்துக் கொள்ளப்படுதல் வேண்டும்.

*இச்சட்டம் தொடங்குவதற்கு முன்னர் செய்யப்பட்ட செயல்களின் செல்லுபடியான தன்மை.*

**3**. முதன்மைச் சட்டவாக்கத்தினால் இலங்கை ஆளணி முகாமை நிறுவகத்தின்மீது அளிக்கப்பட்ட ஏதேனும் தத்துவத்தைப் பின்பற்றி இச்சட்டம் தொடங்கும் தேதிக்குமுன்னர் அதனால் பிரயோகிக்கப்பட்ட ஏதேனும் தத்துவம் அல்லது புரியப்பட்ட ஏதேனும் கடமை அல்லது பணி, எல்லா நோக்கங்களுக்காகவும் செல்லுபடியான முறையில் பிரயோகிக்கப்பட்டுள்ளதாகவும் புரியப்பட்டுள்ளதாகவும் கருதப்படுதல் வேண்டும்

*ஒவ்வாமை ஏற்படும் விடயத்தில், சிங்கள உரை மேலோங்கி நிற்றல்.*

**4**. இச்சட்டத்தின் சிங்கள, தமிழ் உரைகளுக்கிடையே ஏதேனும் ஒவ்வாமை ஏற்படும் பட்சத்தில், சிங்கள உரையே மேலோங்கி நிற்றல் வேண்டும்.